வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர்: திருமதி.வே.இரா.சுப்புலெட்சுமி, இ.ஆ.ப.,

செ.மு.ஆ.அ3/4900/2022 நாள்: 03.04.2024.
பங்குனி 21, திருவள்ளுவர் ஆண்டு 2055.

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப் பணித்தொகுதி – வேலூர் மாவட்ட வருவாய் அலகு – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் செய்யப்பட்ட ஜோதிகா (செல்வி) K., என்பவரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

படிக்கப் பட்டவை :
1) வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.அ5/4900/2022, நாள்: 21.10.2022.
2) அரசாணை (நிலை) எண்.33 தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை நாள்: 08.03.2023.
3) சென்னை, கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் அலுவலக கடித எண். ஆ.கு.3/4600/2024, நாள் : 20.02.2024.

********

ஆணை:-

வேலூர் மாவட்ட வருவாய் அலகில், பேர்ணாம்பட்டு வட்டம், சொக்கரிஷிகுப்பம் கிராம நிருவாக அலுவலராக பணிபுரிந்து வந்து 23.04.2022–அன்று பணியிடையே காலமான லேட்.என்.குமரவேலன், என்பவரின் மகள் செல்வி.K.ஜோதிகா என்பவருக்கு பார்வை 1–ல் படிக்கப்பட்ட வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு தற்போது காட்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். பார்வை 3–ல் படிக்கப்பட்ட சென்னை கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடிதத்தில் காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கிய பணி நியமன அலுவலரால் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து செல்வி.K.ஜோதிகா என்பவருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதி முதல் இவரது பணியினை தமிழ்நாடு அமைச்சு பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் 01.11.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்தும், தனியரது தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது. தனியரது தகுதிகாண் பருவம் மூன்று ஆண்டுகளில் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

| வ.எண். | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் | தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியமைப்பில் வரன்முறை செய்யப்பட்ட நாள். |
|---|---|---|
| 01 | செல்வி.K.ஜோதிகா<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>காட்பாடி. | 01.11.2022 முற்பகல். |

2) சம்மந்தப்பட்ட நபரின் பணிப்பதிவேட்டில் தக்க பதிவுகளை சம்மந்தப்பட்ட அலுவலர் மேற்கொள்ள வேண்டியது.

ஒம்/- வே.முத்தையன்,
மாவட்ட ஆட்சியருக்காக,
வேலூர்.

//ஆணைப்படி//

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்
சம்மந்தப்பட்ட நபர் – காட்பாடி வட்டாட்சியர் மூலமாக.

நகல் : வட்டாட்சியர், காட்பாடி.
நகல் : "அ3" இருக்கைக்கு.